செ.வெ.எண்:04 நாள்:03.01.2017

# பத்திரிக்கைச் செய்தி

## ஊரக மற்றும் நகர்புற இளைஞர்/மகளிர்களுக்கு வேலைவாய்ப்பு முகாம்

கரூர் மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஊரக மற்றும் நகர்புறப் பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்/மகளிர்களுக்கு **அரசு கலைக்கல்லூரி, தாந்தோணி, கரூரில் 07.01.2017 சனிக்கிழமை** அன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை **"இலவச வேலைவாய்ப்பு முகாம்"** நடத்தப்படவுள்ளது. இதில் குறைந்தபட்ச கல்வித் தகுதியாக 8–ஆம் வகுப்பு படித்தவராகவும், பிற பட்டய, பட்டப்படிப்பு மற்றும் தொழில்கல்வி பயின்றவர்கள் கலந்து கொண்டு தங்களுக்கு ஏற்ற வேலைவாய்ப்பினை தேர்வு செய்து கொள்ளலாம். வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளும் இளைஞர்/ மகளிர் தங்களுடைய விண்ணப்பதாரர் விவர படிவத்துடன் கல்வி சான்று மற்றும் உரிய சான்றிதழ்களுடன் வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், இவ்வேலை வாய்ப்பு முகாமில், அனைத்து தொழில் நிறுவனங்களும் கலந்து கொண்டு இளைஞர்கள் / மகளிர்களை நேரடியாக (துங்கள் தேவைகளுக்கேற்ப) வேலைக்கு தேர்வு செய்து கொள்ளலாம். எனவே வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள சிறு மற்றும் பெறு தொழில் நிறுவனங்கள் தங்களது நிறுவனங்களின் பெயரினை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 2–ம் தளத்தில் உள்ள மகளிர் திட்ட அலுவலக அறை எண்.212–ல் முன் பதிவு செய்து கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொடர்பு கொள்ள வேண்டிய:

தொலைபேசி எண்: 04324–257377

**வெளியீடு:**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.